## ஜி20 கூட்டமைப்பில் 21-வது நிரந்தர உறுப்பு நாடாக ஆப்பிரிக்க யூனியன் இணைப்பு



பிரதமர் நரேந்திர மோடி

**புதுடெல்லி:** ஜி-20 நாடுகள் கூட்டமைப்பில் ஆப்பிரிக்க யூனியனை நிரந்த உறுப்பு நாடாக இணைக்கும் நடைமுறை நிறைவேறியது. இதற்கான தீர்மானத்தை பிரதமர் நரேந்திர மோடி மாநாட்டில் முன்மொழிய பின்னர் அது நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஜி-20 அமைப்புக்கு இந்தியா தலைமை தாங்கியுள்ள நிலையில், அந்த அமைப்பின் 18-வது உச்சி மாநாடு டெல்லி பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டபத்தில் இன்றும், நாளையும் நடைபெறுகிறது. இந்தியாவில் ஜி20 உச்சி மாநாடு நடப்பது இதுவே முதல்முறை. இம்மாநாட்டில் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா உட்பட 30-க்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள், ஐரோப்பிய யூனியன் அதிகாரிகள், 14 சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

முன்னதாக மாநாட்டுக்கு வந்த உலகத் தலைவர்களைப் பிரதமர் மோடி வரவேற்று அரங்குக்கு அழைத்துச் சென்றார்.

தொடர்ந்து மாநாட்டில், ஜி-20 நாடுகள் கூட்டமைப்பின் நிரந்த உறுப்பு நாடாக ஆப்பிரிக்க யூனியனை இணைக்கும் நிகழ்வு நடந்தது. ஆப்பிரிக்க யூனியனில் 55 நாடுகள் உள்ளன. இந்நிலையில் ஆப்பிரிக்க யூனியனை இணைத்ததால் ஐரோப்பிய யூனியனுக்கு அடுத்தபடியாக ஜி-20 கூட்டமைப்பு மிகப் பெரிய அமைப்பாக உருவாகியுள்ளது.

முன்னதாக ஜி-20 மாநாட்டுக்கு வருகைதந்த ஆப்பிரிக்க யூனியனின் பிரதிநிதியை பிரதமர் நரேந்திர மோடி ஆரத் தழுவி பாரத் மண்டபத்துக்கு அழைத்துச் சென்றது கவனம் பெற்றது.

மாநாடு தொடங்கியவுடன் மொராக்கோ நாட்டில் ஏற்பட்ட சக்திவாய்ந்த பூகம்பத்தில் சிக்கி உயிரிழந்தோருக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்தார். மாநாட்டில் பிரதமர் மோடியின் இருக்கை முன்னர் பாரத் என்று பெயர்ப் பலகை இருந்தது கவனம் பெற்றுள்ளது.

## தொழில்துறை செயலராக அருண்ராய் நியமனம்



**சென்னை:** தமிழக அரசின் தொழில்துறை செயலராக இருந்தவர் ச.கிருஷ்ணன். சமீபத்தில் இவரை, மத்திய அரசின் மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை செயலராக மத்திய அரசு நியமித்தது.

இவரைத்தவிர, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும்கட்டமைப்பு மேம்பாட்டுக் கழகம் (டுபிட்கோ) மேலாண் இயக்குநராக இருந்த நீரஜ் மிட்டல் மத்திய அரசின் தொலை தொடர்புத்துறை செயலராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, டுபிட்கோ மேலாண் இயக்குநராக ஹனிஷ் சாப்ரா நேற்று முன்தினம் நியமிக்கப்பட்டார். தொடர்ந்து, தொழில்துறை செயலராக, குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் துறை செயலராக உள்ளவி.அருண்ராய் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் விரைவில் தொழில்துறை செயலராகப் பொறுப்பேற்க உள்ளார்.

இருப்பினும், குறு, சிறு, நடுத்தரத் தொழில்கள் துறை தொடர்பாக எந்த அறிவிப்பும் இதுவரை வெளியாக வில்லை.

## ஜி20 உச்சி மாநாடு | இந்தியாவின் அணுகுமுறையும் அதன் பலன்களும் - முனைவர் எம்.வெங்கடாச்சலம் ஐஎப்எஸ்




**புதுடெல்லி:** புது தில்லியில் புதிதாகக் கட்டப்பட்ட பாரத மண்டபத்தின் முதல் விருந்தினர் பெருமையை உலகப் பெருந்தலைவர்கள் பெற்றுள்ளனர். இன்று துவங்கியுள்ள ஜி20 என்பது, 19 நாடுகள் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை உள்ளடக்கிய பன்னாட்டு அமைப்பாகும். இதற்கென நிலைப்பட்ட செயலகமோ, தலைவரோ கிடையாது.

ஒவ்வொரு ஆண்டும் ஜி20 உறுப்பினர்களில் ஒரு நாடு தலைமை ஏற்று பல செயல் திட்டங்களை தீர்மானித்து நடத்துகின்றன. ஆண்டுதோறும் வெறும் நிகழ்வாக கடந்து செல்லும் இந்த ஆலோசனைக் கூட்டங்கள் இந்த ஆண்டு, ஒரு திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. இது பாரதத்தின் திருவிழா. பாரதத்தின் பண்பாட்டை உலகிற்கு பறைசாற்றும் பெருவிழா.

இந்தியாவின் அனைத்து மாநிலங்களின் 60 நகரங்களில் நடத்தப்பட்ட இதன் ஆலோசனைக் கூட்டங்கள், இந்தியாவின் கலாச்சார பன்முகத்தை

பறைசாற்றியது. இந்தியாவின் ஒவ்வொரு மாநிலமும் இந்த ஆலோசனைக் கூட்டங்களில் தனது கலாச்சாரப் பெருமைகளை முனைப்புடன் முன்னிறுத்தின.

உண்மையில், காஷ்மீரத்தை பாகிஸ்தானும், அருணாச்சலப் பிரதேசத்தை சீனாவும் சொந்தம் கொண்டாட முயல்கின்றன. இச்சூழலில், இவ்விரண்டு மாநிலங்களின் ஆலோசனைக் கூட்டங்களும் ஆழ்புலக் கட்டுறுதியை சர்வதேச நாடுகளுக்கு குறிப்புணர்த்திவிட்டன.

குறிப்பாக, இந்திய சுற்றுலாத் துறையின் நோக்கம் அயல் நாடுகளுக்கான விளம்பர செலவின்றி நிறைவேறியது. இது தவிர ஜி20 ஆலோசனைக் கூட்டங்களால் இந்தியாவுக்குக் கிடைத்தது என்ன? உலகுக்கு கிடைத்தது என்ன? எனவும் பார்க்க வேண்டி உள்ளது.

இன்று உலக நாடுகள் இந்தியாவின் வளர்ச்சியை உற்று நோக்கி வருகின்றன. உலகத்தின் அதிக மக்கள் தொகை கொண்ட இந்தியா. உலக இளம்பருவத்தினர் அதிகம் வசிக்கும் நாடாகவும் உள்ளது. இது உலகத்தின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக வளர்ந்துள்ளது.

இன்னும் சில ஆண்டுகளில் நம் நாடு ஜெர்மனி, ஜப்பானை பின்னுக்கு தள்ளி, உலகின் மூன்றாவது பொருளாதார நாடாகி வளரும். இதுபோல், வரலாற்றின் பக்கங்களில் இந்தியா பலவித பட்டங்களை தாங்கி நகர்ந்து உள்ளது.

ஆங்கிலேயர்களின் காலனி நாடாக இருந்த இந்தியா சுதந்திரம் பெற்றபோது, ’ஏழை நாடு’ என்ற பதாகையை தாங்கி நின்றது. பின்னர் பசுமைப் புரட்சி, பொருள் உற்பத்தி மற்றும் சேவைத்துறை வளர்ச்சி இந்தியாவை வளரும் நாடுகளின் பட்டியலுக்கு உயர்த்தியது.

உலகின் வளர்ந்த நாடுகள் பொருளாதார மந்த சூழ்நிலையில் தவிக்க, இந்தியாவின் பொருளாதாரம் வளர்ந்து கொண்டே இருக்கிறது. இந்தியாவுக்கு இணையாக வளர்ந்து கொண்டிருந்த சீனப் பொருளாதாரம் கூட மந்தநிலையை நோக்கி நகர்வது உலக நாடுகளை கலக்கப்படுத்தி உள்ளது.

தற்போது, இருளடைந்த உலகின் பொருளாதார வானில் இந்தியா மட்டுமே நம்பிக்கை நட்சத்திரமாக ஜொலிக்கிறது. இதனால், இந்தியாவின் அறைகூவலை உலக நாடுகள் ஏற்க தயாராகிவிட்டன. இந்தியாவின் அறைகூவல் தனக்கானது அல்ல வளர்ந்து வரும் நாடுகளுக்குமான ஒட்டுமொத்த குரல். இந்தியா தான் நடந்து வந்த பாதையை மறக்கவில்லை.

அது சந்தித்த சோதனைகளும், போராட்டங்களும் வளரும் நாடுகள் இன்றும் சந்திப்பதை காண்கின்றது. குறிப்பாக சூழ்நிலை பிறழ்வும், உலக வர்த்தக நடைமுறை பேதங்களும் வளரும் நாடுகளாலேயே அதிகம் தாக்குகின்றன. இதை இந்தியா தொடர்ந்து சுட்டிக் காட்டிக்கொண்டே இருக்கிறது. புதுடில்லியின் பாரத மண்டபத்தில் நடக்கும் ஜி20 மாநாட்டில் இந்தியா இதை அறைகூவலாகவே விடுக்கும்.

எண்பது சதவிகித உலக பொருளாதாரத்தையும், எழுபத்தைந்து சதவிகித உலக வர்த்தகத்தையும் கொண்டது இந்த ஜி20 அமைப்பு. இந்த அமைப்பு, இந்தியாவின் அறைகூவலை செவிமடுத்து கேட்டே ஆக வேண்டும். ஏனெனில், உலக பொருளாதார மந்த சூழலில் இந்தியா மட்டுமே விடிவெள்ளியாக காட்சியளிக்கிறது.

இத்தகைய காரணங்களுக்காகவே இந்தியா, 'சாம்பியன் ஆப் தி குளோபல் சவுத்' என்ற அடையாளத்தை ஈன்றெடுத்து நிற்கிறது. உலக நலன்களை பேணுகின்ற

அதே வேளையில் தன் தேச நலன்களையும் பேணி வளப்பதற்கு இந்த ஜி20 மாநாடு பெரும் வாய்ப்பாக அமையும்.

வெளிநாட்டு முதலீடு, உலகின் தரம் வாய்ந்த தொழில்நுட்பம், உலக உற்பத்தி சங்கிலியின் சிரத்தன்மை ஆகியன இந்தியாவின் வளர்ச்சிக்கு இன்றிமையாதது. இந்த ஜி20 மாநாடு, இந்தியா இத்தகைய விடயங்களையும் உலக தலைவர்களுடன் விவாதிக்கும் நடைமேடையாக அமையும்.

இந்த ஆண்டின் பல்வேறு ஜி20 ஆலோசனைக் கூட்டங்களுக்கு இடையே முதன்முறையாக இந்தியா, ’ஸ்டார்ட் அப் ஜி20’ என்ற அமைப்பை ஏற்படுத்தி குருகிராமில் நடத்தியது. இந்த நடவடிக்கை இந்தியாவை மேலும் வளர்ச்சிப் பாதைக்கு எடுத்துச் செல்லும்.

இந்தியாவில் ஸ்டார்அப் நிறுவனங்கள் பெருமளவில் வளர்ந்துள்ளன. அவற்றில் யுனிகார்ன் எனப்படுபவை மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் இடம் பெற்றுள்ளன. இதுபோல், யுனிகார்ன் எனப்படும் வகை அந்தஸ்தானது, ஒரு பில்லியன் டாலர் வர்த்தகத்தை தாண்டும் ஸ்டார்அப்புகளுக்கு அளிக்கப்படுகிறது.

இத்தகைய சூழலில், நடைபெற்ற, ‘ஸ்டார்அப் 20’ ஆலோசனைக் கூட்டம் அந்நிய முதலீடுகள் மற்றும் தொழில்நுட்பங்கள், இந்திய ஸ்டார்ட் அப் நிறுவனங்களை ஈர்க்கும். இது நம் பாரதத்தை வளர்ச்சி பாதைக்கு எடுத்துச் செல்லும்.

இது மட்டுமன்றி, இந்தியாவின் ஜி20 ஆலோசனைக் கூட்டங்களில் முதன்முறையாக பல முக்கிய தலைப்புகள் முன்னிறுத்தப்பட்டன. பேரிடர்களில் குறைந்த தாக்கம், சிறுதானிய முக்கியத்துவம், சைபர் பாதுகாப்பு, பெண்கள்

தலைமையிலான வளர்ச்சி, பாரம்பரிய மருத்துவத்தின் வளர்ச்சி உள்ளிட்டவை இடம் பெற்றிருந்தன.

இத்தகைய விவாத முன்னெடுப்புகள் நமது தேச நலன்களோடு, உலக நலன் காப்பதிலும் முக்கிய பங்காற்றும். இந்த ஆண்டு துவக்கத்திலிருந்து இந்தியா, 'ஒரே பூமி ஒரே குடும்பம் ஒரே எதிர்காலம்' என்ற குறிக்கோளை நோக்கமாகக் கொண்டு ஜி 20 ஆலோசனைக் கூட்டங்களில் செயலாற்றியது.

இது பாரத தேசத்தின் பழம்பெரும் தத்துவமான 'வாசுதேவ குடும்பகம்' என்ற ஞானத்தின் அடிப்படையில் பெறப்பட்ட நோக்கமாகும். இந்த நோக்கம், செயல்படுத்தப்படும் வேளையில் கவிஞர் பூங்குன்றனாரின் கனவான 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது மிக விரைவில் இந்தியாவில் நனவாக்கப்படுவது உறுதி!